செ. கு. எண்: 133 நாள்: 16.09.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை –16.9.2016

சென்னை, தண்டையார்பேட்டை வட்டம், திருவள்ளுவர் நகரைச் சேர்ந்த திரு. பாஸ்கர் என்பவரின் மகன் செல்வன் ரகுபதி, திரு. ராஜரத்தினம் என்பவரின் மகன் செல்வன் ஜெகன் ஆகியோர் 13.9.2016 அன்று காசிமேடு பகுதியிலுள்ள கடலில் குளிக்கச் சென்ற போது, கடல் அலையில் சிக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த செல்வன் ரகுபதி மற்றும் செல்வன் ஜெகன் ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.